# *There is no nation but has had its Warner*

## *அச்ச மூட்டி எச்சரிக்கை செயல்பவர் வராத எந்த சமுதாயத்தவரும் இல்லை*

***FRIDAY SERMON 06-06-2014***

### *Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)*

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீதும் தஅவ்வுசும், சூரா∴பாத்திஹாவும் ஓதிக் கொண்டு இவ்வாறு கூறினார்.

அல்லாஹ்வின் அருளால், வரலாற்றில் இடம் பெற்றுக் கொள்ளும் ஒரு ஜீம்ஆ ஆகும் இது. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் ‘‘ஷெசெல்லிசில்’’ரஜிஷ்டேஷ்ஷன் செய்துக் கொண்ட பிறகு, இறை அருளால் ஷெசெல்லிசை சார்ந்த ஏராளமான கிறிஸ்தவ மக்கள் (மாஹை, பிஸ்லீன், லா டிஹ்கு மற்றும் சிறு தீவை சார்ந்தவர்கள்) இந்த எளியவன் கரங்களில் பை-அத்து செய்துக் கொண்டனர். கலீ∴பத்துல்லாஹ் என்ற நிலையில், நான் இங்கிருந்துதிரும்பி போனதற்கு பிறகும், நீங்கள் இந்த மகத்தான லட்சியத்தை தொடர்ந்துக் கொள்வீர்கள் என நான் எண்ணுகிறேன். இந்த இறைச் செய்தியை பரவ செய்வீர்கள் என நான் நினைக்கிறேன். கடந்த ஒரு வரா காலமாக நான் உங்கள் கூடவே இருந்தேன். உங்களுக்கு கிடைத்திருக்கும். இந்த இறைச் செய்தியை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

ஷெசில்லிசில் பெரும் பான்மை மக்களும் கிறிஸ்தவ மத நம்பிகையாளர்கள் ஆவார்கள். இன்றைய வெள்ளிக் கிழமை குத்து∴பா ஆரம்பித்துக் கொள்ளுவதற்கு முன் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் ஷெசெல்லிசில் எல்லா தீவுகளிலும் ரஜிஸ்ட்டர் செய்துக் கொண்டுள்ளது. இப்போது நமக்கு ஒரு மேனேஜீங் குழு உண்டு. தேசிய அளவில் ஒரு தலைவரும் உண்டு. தற்பொழுது ஒரு வீடு வாடகைக்கு எடுத்திருக்கின்றார்கள். ஜமா அத்தின் எல்லா செயல்களும் அதில் நடைப்பெற்று வருகின்றது. ஜீம் ஆ தொழுகை, தர்பியத் கூட்டம், அதைப் போன்று பலதும். அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கு.

எனது பிரிய சகோதரி சகோதரர்களே இந்த உலகில் ஒரு பரி பூரணமான மதம் நிலை நிற்க வேண்டுமென, எல்லா மத தோழர்களும் நம்பிக் கொள்ளுகின்றார்கள். அதே

நேரம் எல்லா மதங்களும் கடந்த காலங்களில் பிரிபூரணமான மனிதர்களை உருவாக்கியது. ஆதைப் போன்று, நாம் வாழ்ந்திருக்கின்ற இக்காலக்கட்டத்தில் அவ்வகையான மனிதர்களை உருவாக்கிக் கொள்ள அம்மதங்களுக்கு முடிந்துக் கொள்வதில்லை என்று மட்டுமின்றி, மனிதர்களுக்குள் ஒன்றுக்கொன்றான பந்தத்தை எற்படுத்திக் கொள்ளவும் அம்மதங்களுக்கு இப்போது இயலுவதில்லை. முன் காலங்களில் அம்மதங்கள் வழியாக மனிதர்களுக்கும் இறைவனுக்கும் ஒன்றுக் கொன்று தொடர்பு இருந்தன. இப்போது ஏன் இறைவன் அவ்வகையிலான ஒரு உண்மை மதத்தை உலகில் தோற்றுவிக்காமல் இருப்பது? அவனது அதிகார வல்லமையினை விளக்குவதும், அதற்கு எற்றவார் மனித உள்ளங்களில் பரிணாமத்தை எற்படுத்திக் கொள்வதுமே மதத்தின் ஏக நோக்கம் என்றிருக்க ஏன் இறைவன் அதை இப்போதும் தொடர்ந்து கொள்ளாமல் இருப்பது?

உங்கள் அனைவர்களோடும் நான் ஒரு கேள்வி கேட்கின்றேன். ஒருவர் அழகான ஒரு வீடு கட்டுகின்றார். அதை மிக நல்ல நிலையில் அலங்கரித்துக் கொள்கின்றார். அதற்கு கேடு பாடு ஏற்படுகின்ற போது அதை பராமரிக்காமல் அது அழிந்துக் கொள்ளட்டும் என அவர் எண்ணுவாரோ? அல்லது ஒருவர் மிக அழகான ஒரு பூந்தோப்பு அமைத்தார். பிறகு அதற்கு தண்ணீர் ஊற்றாமல் அது உணங்கி நாசமடையட்டும் என எண்ணி விடுவாரோ? மேல் கூறிய விஷயங்கள் மனிதர்கள் செய்ய மாட்டார்கள் என்றால் இறைவன் ஒரு பரிபூரணமான மதத்தை தோற்றுவித்தப் பிறகு மனித குலம் நல் வழி பெற்றுக் கொள்ள அதை பாதுகாக்காமல், பராமரிக்கமால் கை விட்டுக் கொண்டான் என நமக்கு எப்படி கூறிக் கொள்ள முடியும்? யூத மதம் நிலை நிற்பதற்காக ஹ்ஸ்ரத் மூஸா (அ) க்கு பிறகு நபி மார்களை ஒருவருக்கு பிறகு ஒருவராக அல்லாஹ் நியமித்துக் கொண்டிருந்தான் என்பதைப் பற்றி நாம் கற்றுக் கொண்டதல்லவா? மோசைக்கு பிறகு 13 நூற்றாண்டுகளில் ஏராளமான நபி மார்கள் அவதரித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் இயேசுவின் வடிவில் ஒரு உன்னதமான சீர் திருத்தாளர் தோன்றினர். அது வரையில் தோன்றிய நபி மார்களை விட மேன்மையானதும் விரிவானதுமான நோக்கம் அந்த சீர் திருத்தாளரில் இருந்தது.

ஒரு காலம் தோன்றும் அன்று இஸ்லாமின் வளர்ச்சிக்கு கேடு விளையும், முஸ்லீம்களின் உள்ளத்தில் இருந்து இஸ்லாமின் ஆன்மீகம் இழந்து விடும், பலதரப்பட்ட தவறான பிரச்சாரம் செய்யப் படும், இஸ்லாமின் தூய போதனைகளுக்கு பங்கம் எற்படும் என்று கால கட்டங்களுக்கு முன்னவே தீர்க்க தரிசனம் மூலமாக கூறப்பட்டிருந்தது. இந்த குறிப்பான சூழ்நிலையில் முஸ்லீம்களில் இருந்து ஒரு மஸீஹ் தோன்றுவார் என்றும் மோசையின் இறை கட்டளைகளுக்கு எற்றவார் இயேசு பணியாற்றியது போன்று, முஸ்லீம்களில் இருந்து தோன்றும் மஸீஹீம் இஸ்லாமின் கட்டளைகளுக்கு ஏற்றவார் தொண்டாற்றுவார் என வாக்குறுதி செய்திருந்ததேயாகும். நபி அரசன் முஹமது (ஸல்)

வுக்க பிறகு 13 நூற்றாண்டுகள் நிறைவடைந்த பின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) அவர்கள் தோன்றினார். அவரே ஆவார் அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் நிறுவுனர். மோசைக்கு பிறகு 13 நூற்றாண்டுகள் நிறைவடைந்த பின் நஸ்ரேத்தில் இயேசு தோன்றிய போது, மக்கள் அவரிடம் தவறாக நடந்து கொண்டது போன்றே முஹம்மதீயா மஸீஹின் காலத்திலும் மக்கள் நடந்துக் கொண்டனர்.

இயேசு தோன்றிய நேரம் யூத மக்கள் எதிர்பார்த்திருந்தது ஆகாயத்தில் இருந்து எலீயா தீர்க்கதரிசி தோன்றுவார் என்றாகும். பதிலாக அம்மக்களுக்காக தோன்றியவர் ஸ்னாபக யோவான் ஆவார். சாதாரணமாக மனிதன் பூமியில் தோன்றுவதைப் போன்றே அன்னாரின் வருகையும் அமைந்திருந்தது. இந்த கால கட்டத்திலும் இயேசு ஆகாயத்தில் இருந்து நேரடியாக இறங்வார் என மக்கள் எதிர்ப் பார்த்தார்கள். ஆனால் அம்மக்களுக்கு ஒரு மஸீஹ் தோன்றினார். ஆன்மிகம் இழந்த மக்களின் கண்களுக்கு ஆகாயத்தில் நின்று இறக்கப்பட்டாலும் சரி பூமியிலிருந்து தோற்றுவிக்கப்பட்டாலும் சரி இரண்டு ஒன்று போலவேயாகும். கடந்த காலம் நிகழ்ந்தும் அவ்வாறேயல்லவா? ஆயிரக்கணக்கான மக்களை சொர்க்கத்தின் பால் எட்டவைப்பதற்கு அவனால் முடியாது என்றால்லவா அவர்கள் கூறிக் கொண்டது.

சொர்க்கத்தில் இருந்து இயேசு இறங்கி வருவார் என்று எதிர்பார்த்திருக்கின்றார்கள்! பூமியில் உள்ள அவரது வார்த்தைகளை அவர்கள் மறந்து விட்டனர். இயேசு கூறினார். ''ஒரு மனிதனும் சொர்க்கத்தின் பால் ஏறிச் சென்றது கிடையாது. அவ்வாறு நிகழ்ந்திருந்தால் மட்டுமே அன்னார் சொர்க்கத்தில் இருந்து இறங்கிக் கொள்வது'' இயேசு பிறந்தது பூமியில் ஆகும். சொர்க்கத்தில் இருந்து இறங்கி வந்தது அல்ல.

இவர்கள் நம்பிக்கை வைத்திருகின்றார்கள். அன்னாரின் இரண்டாம் வரிகை, சொர்க்கத்தில் இருந்து நிகழும் என. இது அற்புதம் வாய்ந்த விஷயமல்லவா? அன்னாரே கூறுகின்றார் சொர்க்கத்தில் கயறி சென்றவர்கள் மட்டுமே சொர்க்கத்தில் இருந்து இறங்குவது என. ஆகவே ஒருவர் பூமியில் பிறந்தால் அவருக்கு சொர்க்கத்தில் ஏறிச் செல்ல முடியாது. ஆதைப் போன்றே அங்கிருந்து இறங்கி வரவும் இயலாது. கன்னியா மரியாவுக்கு பிறந்த இயேசுவை எப்படிச் சொர்க்கத்தில் இருந்து இறங்கி வந்தவர் என கூறிக் கொள்ள முடியும்? எவ்வாறு பூமியில் தோன்றினாரோ அதைப் போன்றே அவர் சொர்க்கத்தில் ஏறிச்சென்றார் என்று பொருள் கொடுப்பதல்லவா சரி? கன்னிய மரியாவுக்கு பிறந்த இயேசுவை சொர்க்கத்தில் இருந்து இறங்கி வந்தவர் என்று விளக்கமளித்தால் இஸ்லாமில் தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹீம் அவ்வாறே சொர்க்கத்தில் இருந்து வந்தவர் என கூறிக் கொள்ளலாம் அல்லவா?

எனது பிரிய சகோதர சகோதரிகளே குழந்தைகளே! எனது பிரசங்கத்தை நிறைவுப் படுத்திக் கொள்வதற்கு முன் அதைக் குறித்து புனித குர் ஆனில் அல்லாஹ் கூறிக் கொள்வதைக் கூட நான் செல்லுகின்றேன். **''எச்சரிகையாளர் வராத எந்த ஒரு மக்களும்**

**இல்லை". தூய நபி முஹமது (ஸல்) வுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அ) க்கும் பிறகு நம்பிக்கையை தூய்மைப்படுத்தல் எனும் நோக்கத்துடன் இந்த நூற்றாண்டில் என்னை அல்லாஹ் நியமித்துள்ளான். முழு உலகினையும் ஒளிமயமாக்குவதற்கும் பூமியின் இருள் நிறைந்த கோணுகளில் கூட வெளிப்பாடின் பிரகாஷத்தை பரவச் செய்வதற்கும் இறைவன் என்னை தோற்றுவித்திரிக்கின்றான். இந்த எளியவன் மூலமாக வெளிப்பாட்டின் பிரகாஷத்தை உங்களுக்கு தரிசிக்க முடியவில்லையென்றால், உங்களின் தேசிய பாரம்பரிய நம்பிக்கை இந்த இறை பிரகாஷத்தை காணயியலாத அளவிற்கு உங்கள் கண்களில் இருள் நிறைத்துக் கொண்டது என்று மட்டுமே இதற்கு பொருளன்றி உங்களிடம் இறை தூதர் தோன்றவில்லை என்று அதற்கு அர்த்தமில்லை.**

ஆன்மிக முன்னேற்றவும் வெளிப்பாடுகளின் வாசலும் இப்போதும் திறந்தே கிடக்கின்றது. அது என்றென்றும் திறந்திருக்கவே செய்யும். ஒரு புதிய "ஷரியத்து" இனி வருவதில்லை. திரு குர் ஆன் மூலமாக கிடைத்த கட்டளைகள் இறுதியாகும். இந்த அருள் வழியாக அல்லாஹ் வெளிப்பாடுகள் வழங்குவான். அவன் தேர்ந்தெடுக்கின்ற அவனது தூதர்கள் மூலமாக அவனது வேத நூலை விளக்குவான். மனித குலத்திற்கு அதைக் கற்பிப்பது அவ்வாறேயாகும். இறை வெளிப்பாடின் வாசல் திறந்திருக்கும் வேறொரு நவீனமான சட்டம் தேவையில்லை. காரணம் பரிபூரணமான வாழ்க்கை சட்டங்கள் இஸ்லாமில் இருக்கின்றன. இறைவனை அடைவதற்கான அனைத்து வழிகளும் அது மூலமாக திறக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே புதிய ஷரியத்துடன் எவரும் தோன்ற வேண்டிய தேவையில்லை. ஆனால் ஆன்மீக முன்னேற்றத்திற்காக நபி மார்களின் வருகையின் வாசல் திறந்திருக்கும். அது எக்காலமும் திறந்தேயிருக்கும்.

நம்முடைய திவ்வியமான பாது காவலன் அல்லாஹ் ஆவான். நமக்கு முன்கடந்தோர்களையும் அவனே பாதுகாத்தான். அதனால் சிந்தித்துக் கொள்ளுங்கள். நான் எதையும் அழித்துக் கொள்ளுவதற்கு வரவில்லை. மாறாக நான் முழு மைப்படுத்தவே வந்துள்ளேன். நிச்சயமாக நான் உங்களிடம் கூறிக் கொள்கின்றேன். ஆகாய பூமிகள் அதன் சட்ட எல்லையை கடந்து வேளியே செல்வதில்லை. சட்டத்திற்கு உட்பட்ட வகையில் எல்லாம் முழுமை பெறும் வரையில். "இன்ஷா அல்லாஹ்". உங்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. ஓவ்வொரு நாளும் கடந்து செல்ல செல்ல உங்களின் நம்பிகையின் சக்தி அதிகரித்து விடட்டும். ஆமீன்.

Issued by
Jamaat-UI-Sahih-Al-lslam
Dawa Department
Tamil Nadu (Regd.No:A/693)
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamilnadu
Cell: 9947181650
9789180817